## சிறப்பு சொற்பொழிவாளர்கள் உரையாற்றினர்!

# வெற்றிகரமாக 200 தொகுதிகளைக் கடந்த தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை!















சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் மாண்புமிகு கழகத்தலைவர் முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு பிப்ரவரி 1 ஆம் தேதி முதல் தொடங்கிய தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரயானது 205 சட்டமன்றத் தொகுதிகளில் வெற்றிகரமாக நடந்து முடிந்துள்ளது. கழகத்தின் 24 நட்சத்திரப் பேச்சாளர்கள் திராவிட மாடல் அரசின் சாதனைகளையும் , ஒன்றிய பாஜக அரசு மற்றும் அதன் அடிமைக் கூட்டணியின் துரோகத்தையும் மக்கள் முன் விளக்கமாக எடுத்துரைத்து பரப்புரை செய்தது மக்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் (27.02.26) 13 சட்டமன்றத் தொகுதிகளில் பரப்புரைக் கூட்டங்கள் சிறப்பாக நடைபெற்றன. காட்பாடியில் திரு.கலாநிதி வீராசாமி, காட்டுமன்னார்கோயிலில் திரு.கோவி செழியன் , ஒட்டன்சத்திரத்தில் திரு.கார்த்திகேய சிவசேனாபதி, உதகமண்டலத்தில் திரு.சபாபதி மோகன், முசிறியில் திருமதி.கனிமொழி சோமு, கீழ்வேளூரில் திரு.எம்.எம்.அப்துல்லா, மணப்பாறையில் திரு. பி.எச். பாண்டியன், திருச்சிராப்பள்ளி மேற்கில் திரு. A.K.S விஜயன், மதுரை வடக்கில் திரு.எழிலன் நாகநாதன், வந்தவாசியில் திரு. கம்பம் செல்வேந்திரன், நன்னிலத்தில் திரு.தயாநிதி மாறன் , திருமங்கலத்தில் திரு திருச்சி சிவா, விருதுநகரில் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டு பரப்புரை செய்து ஆதரவு திரட்டினர்.

திருச்சி மேற்கில் திரு. ஏ.கே.எஸ். விஜயன் அவர்கள் பேசும்போது " கொரோனா காலத்தில் ஒட்டுமொத்த நாடும் உயிருக்கு பயந்து தவித்தபோது துணிந்து களத்தில் நின்று பணியாற்றியதோடு நிவாரண நிதியாக அனைத்து குடும்பத்திற்கும் 4000 ரூபாய் வழங்கியவர் நமது முதலமைச்சர் அவர்கள் என்றும், அச்சமயத்தில் 100 நாள் வேலை சம்பளத்தை கூட நிறுத்தி வைத்தது தான் ஒன்றிய பாஜக அரசு " என்பதை எல்லாம் மக்களிடையே நினைவூட்டினார். தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு காரணம் திராவிட மாடல் பவர்புல் எஞ்சின் தான் என குறிப்பிட்டவர் "மகளிர் உரிமைத் தொகை' ஒரு மகத்தான திட்டம். இன்று சுமார் 1.31 கோடி பெண்கள் மாதம் 1,000 ரூபாய் பெற்று வருகிறார்கள். தேர்தலை காரணம்காட்டி இதை தடுக்க நினைத்தார்கள் ஆனால் அதை முறியடித்து முன்கூட்டியே 5,000 ரூபாயை உங்கள் கையில் சேர்த்தவர் நமது முதல்வர்." என விளக்கமாய் எடுத்துரைத்தார்.

திரு.மனோஜ் பாண்டியன் அவர்கள் மணப்பாறை மற்றும் திருச்சியில் உள்ள அனைத்து தொகுதிகளில் திராவிட மாடல் அரசு கொண்டு வந்த திட்டங்களையும் , நிறைவேற்றிய வாக்குறுதிகளையும் பட்டியலிட்டு பேசினார் மேலும் "இந்தியாவிலயே பாஜகவின் பாசிசம் மற்றும் ஓரவஞ்சனைகளை எதிர்த்து தைரியமாக குரல் கொடுக்கும் ஒரே தலைவர் மு. க. ஸ்டாலின் என ஆணித்தரமாக பதியவைத்தார்" அதோடு இன்று அதிமுகவை அடகு வைத்தது மட்டுமில்லாமல், நாளை அதிமுகவை பாஜகவிற்கு தாரை வார்க்க போகிறார் எடப்பாடி பழனிசாமி என்று எடப்பாடி பழனிசாமியை கடுமையாக விமர்சித்து பேசினார்.

உதகையில் திரு.சபாபதி மோகன் அவர்கள் பேசும் போது " உதகமண்டலம் தொகுதியில் மட்டும் 60,000 பெண்கள், கலைஞர் மகளிர் உரிமை தொகையினால் பயனடைந்து வருகின்றனர்" என குறிப்பிட்டதோடு "துணை முதல்வர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள், இளைஞர் அணி மூலமாக, 40 லட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் அளித்து, அவர்களுக்கு வேலைவாய்ப்பினை உறுதி செய்யும் வண்ணம் சாதனை செய்து உள்ளார் "என்று பேசினார். மேலும் அவர் இந்த தேர்தல் டெல்லி பாஜகவின் அடக்குமுறைக்கு எதிரான தேர்தல். இதில் தமிழ்நாடு என்றும் தலைகுனியாது என்று அவர்களுக்கு பாடம் புகட்ட வேண்டும்" என எழுச்சியுரையாற்றினார்.

நடைபெற்று முடிந்த 205 சட்டமன்ற தொகுதிகளிலும் மக்கள் அணியணியாக திரண்டுவந்து ஆதரவு தெரிவித்தனர். அனைத்து இடங்களிலும் திராவிட மாடல் அரசுக்கு ஆதரவான மனநிலையையே காண முடிந்தது.




பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு–44க்குட்பட்ட சத்தியவாணி முத்து நகர், பாடசாலை தெருவில் மேயர் மேம்பாட்டு நிதியில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட இரவு பாடசாலை மற்றும் திறன் மேம்பாட்டு மையத்தினை நேற்று (27.02.2026) மேயர் திருமதி ஆர்.பிரியா, பயன்பாட்டிற்குத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, நிலைக்குழுத் தலைவர் (வரிவிதிப்பு (ம) நிதி) திருமதி சர்பஜெயாதாஸ் நரேந்திரன், மண்டல அலுவலர்.ஏ.ராஜ்குமார், இரா.நரேந்திரன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மும்பை தி.மு.க. சார்பில் முதல்வர் பிறந்த நாள் விழா!

## பொறுப்புக்குழுத் தலைவர் ம.சேசுராசு தலைமை!

மும்பை, மார்ச் 1-

மும்பை தி.மு.க. சார்பில் இன்று (01.03.2026 - ஞாயிறு) மாலை 6மணிக்கு தாராவி கலைஞர் மாளிகையில் தமிழ்நாட்டின் முதல்வர் - கழக தலைவர் அவர்களின் 73வது பிறந்த நாள் விழா கொண்டாடப்படுகிறது.

மும்பை தி.மு.க. பொறுப்புக்குழுத் தலைவர் ம.சேசுராசு தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், மும்பை தி.மு.க. பொறுப்புக்குழு உறுப்பினர் மாறன் ஆரியசங்காரன் வரவேற்புரையாற்றுகிறார்.

மும்பை தி.மு.க. பொறுப்புக்குழு உறுப்பினர் அன்பழகன் பொற்கோ பிறந்தநாள் கேக் வெட்டி சிறப்புரையாற்றுகிறார்.

இவ்விழாவில் மும்பை திராவிடர் கழக தலைவர் பெ.கணேசன் மராத்திய மாநில வி.சி.க. அமைப்பாளர் எஸ்.சாலமோன் ராஜா, மும்பை பகுத்தறிவாளர் கழக தலைவர் அ.இரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

மும்பை கழகத்தின் மூத்த உறுப்பினர் விழுப் புரம் அரசூர் இரா.மதியழகன், மலபார்குன்று பகுதி தி.மு.க. செயலாளர் சேரை ச.பிரகாஸ், கலைஞர் தமிழ்ச் சங்கம் நிர்வாகக் குழு உறுப்பினர் ஜாகிர் உசேன், மும்பை காங்கிரஸ் செயலாளர் கோபாலகிருஸ்ணன், ரவி குணசீலன், திருவள்ளுவர் நற்பணி மன்றம் தலைவர் ந.இராதா கிருஸ்ணன், மனித நேயம் அமைப்பாளர் சங்கர் திராவிட், தமிழ் ஓட்டுநர் சங்க தலைவர் இரா. ரவிரஜினி, இதயம் அறக்கட்டளை தலைவர் மகேந்திரன் அண்ணாமலை, கொலாபா தமிழ்ச் சங்கம் தலைவர் வ. பன்னீர் செல்வம், பொன். சுப்பிரமணியன், இராசேந்திரன்,

மும்பை மகிழ்ச்சி மகளிர் பேரவை நிர்வாகிகள் திருமதி வனிதா இளங்கோவன், திருமதி சுமதி மதியழகன், திருமதி வெண்ணிலா சுரேஸ், திராவிடர் கழக துணைத் தலைவர் இ.அந்தோணி, துணைச் செயலாளர் அ.கண்ணன், உலகநாதன், சி.பாண்டியன், அழகுராஜா, குப்பன், மகாவிஸ்ணு, ஓர்லி பகுதி தி.மு.க. செயலாளர்கள் இரா.காந்தி, கொலாபா அப்துல் திவான் மைதீன், வக்கோலா சேலம் மா.சீனிவாசன், ஜவேரிபஜார் வே.இரவிச்சந்திரன், கோலிவாடா பி.இராமையா, தி.மு.க. முன்னாள் இளைஞரணி துணை அமைப்பாளர் பொய்சர் க.மூர்த்தி,கே.கே. செல்வராஜ் தாராவி பகுதி என்.வி.சண்முகராசன், தே.ஸ்டீபன், கோ.கருணாநிதி, மா.ராசன், கோவிந்தன், முனீஸ்வரன், காளிதாஸ்சேர்மன்துரை, எஸ்.செல்வராஜ், வக்கோலா அன்பில் ரஞ்சன் காளியப்பன், கொலாபா ரமேஸ், தாடி கருப்பையா, மகாராஜ், கழக பணிமனை காப்பாளர் க.ராசன் போன்ற ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்கள்.

தி.மு.க. பொறுப்புக்குழு உறுப்பினர் க.மு.மாணிக்கம் நன்றியுரையாற்றுகிறார்.

விழா முடிவில் அனைவருக்கும் அசைவ உணவு வழங்கப்படுகிறது.